தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4] திபி.2017 நளி (7-12-1986) 65 காசுகள் [இதழ் எண்: 77] [பகுதி31-31

வீடு வேண்டும் என்ற நிலையிலிருந்து திண்ணை வேண்டும் எனப் போராளிகள் இறங்கி வரலாமா?

தமிழீழக் கோரிக்கையைக் கைவிடக் கூடாது!

தமிழினமே அழிவதானாலும், எதிர்காலத் தமிழனுக்கென்று ஒரு நாட்டை உருவாக்கிவிட்டே அழிய வேண்டும்!

தமிழினம் தன்னை மீட்டெடுத்துக் கொள்ளும் இறுதி நேரம் இது!

அனைவரும் இணைந்து நின்று போராடுவோம்!

போராளிகளுக்குப் பாவலரேறுவின் உருக்கமான வேண்டுகோள்!

கடந்த மாதம் தமிழக அரசு தமிழீழப் போராளிகளிடம் நடந்து கொண்ட அரசியல் பண்பாடற்ற அதிரடி நடவடிக்கைகளுக்குப் பின்னர், தமிழீழப் போராளிகளில் சிலர் அவர்கள் கொண்ட மனவுறுதியில் சிறிது நெகிழ்ச்சி காட்டி வருவதாகத் தெரிகிறது. அதுபற்றிப் பல்வேறுபட்ட கருத்துகளும் அறிக்கைகளும் அன்றாடம் வெளிவந்த வண்ணமாகவே உள்ளன. அவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது, உறுதியும் ஊக்கமும் மிக்க நம் தமிழீழப் போராளிகள், தங்கள் தமிழீழக் கோரிக்கையில் எங்குத் தளர்ச்சியுற்று விட்டார்களோ என்று கவலையுடன் எண்ணத் தோன்றுகிறது.

சென்ற நவம்பர் மாத இறுதியில், இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர், கொழும்பில் நடந்த ஒரு செய்தியாளர் கூட்டத்தில், தமிழீழப் போராளிகள் தங்களின் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டு, மாநிலத் தன்னாட்சி முறைக்கு இறங்கி வந்திருப்பதாகவும், போராளிகளில் ஒரு சிலரே இன்னும் அந்நிலைக்குத் தடையாக விருப்பதாகவும் கூறியதாகச் செய்தி வந்தது. அப்பொழுது அச்செய்தி முழு உண்மையாக இருக்க முடியாது என்றே கருதியிருந்தோம்.

ஆனால், அண்மையில் சிறந்த திறனாய்வாளரும் நடுநிலைச் செய்தியாளருமாகிய திரு. குல்திப் நய்யார் எழுதிய அரசியல் திறனாய்வுக் கட்டுரையில், 'யாழ்ப்பாணத்துடன் முழுமையாக இல்லாவிட்டாலும், கிழக்கு மாநிலத்தில் மூன்றில் இருபகுதிகள் இணைக்கப்பட்டுக் கருதப்பெற்று வரும் மாநிலக்குழுக்கள் மூலம் மாற்றப்படும் அதிகாரம் உண்மையாகவிருந்தால் இலங்கையினுள் ஒரு தமிழ் மாநிலமாக ஈழத்தை ஏற்றுக் கொள்ள தமிழ்ப் போராளிக்குழுக்கள் அணியமாக இருக்கின்றன.' என்று குறிப்பிட்டுள்ளதைப் பார்த்தவுடன், நாம் ஐயப்பட்டது சரியாகவே போய்விட்டதே என்று எண்ணி ஆற்றொணாக் கவலைகொண்டோம்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், "இலங்கையிலிருந்து தனிநாடாகப் பிரிந்து போக வேண்டுமெனப் போராளிகள் குழுக்கள் வலியுறுத்தவில்லை." என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

உண்மை எதுவாக விருப்பினும், தமிழீழப் போராளிகளுக்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது

— என்னும் திருக்குறளை நாம் நன்கு நினைவில் வைத்துக் கொள்ளல் வேண்டும். யானை வேட்டைக்குப் புறப்பட்டவன் முயலின் பின்னால் போகலாமா? வீடு வேண்டும் என்ற நிலையிலிருந்து, திண்ணையில் இடம் கிடைத்தாலும் போதும் என்னும் நிலைக்கு வரலாமா?

தமிழினம் தன்னை மீட்டெடுத்துக் கொள்ளும் இறுதி நேரம் இது. பல்வேறு தரப்பட்ட தமிழ் மக்களும், பல நாடுகளில் உள்ள தமிழின மக்களும் ஒருங்கிணைந்து நின்று தங்கள் உரிமைகளுக்குப் போராட வேண்டிய நேரம் இது. இக்கால் உள்ள தமிழினமே அழிவதானாலும், எஞ்சியுள்ள எதிர்காலத் தமிழினத்துக்கென்று உலகில் ஒரு நாட்டையாகிலும் உருவாக்கிவிட்டே அழிய தமிழன் ஒவ்வொருவனும் உறுதி செய்து கொள்ள வேண்டிய நேரம் இது.

தமிழனுக்கென்று உலகில் இரண்டே இரண்டு நாடுகளைத்தான் இப்பொழுதுள்ள உலகச் சூழ்நிலையில் உருவாக்கிக் கொள்ள இயலும். ஒன்று தமிழரின் தாயகமாகிய தமிழ்நாடு; இரண்டு இலங்கைத் தமிழரின் வரலாற்றுக்கால வாழ்நிலமாகிய தமிழீழம். இந்த இரண்டு நாடுகளுந்தாம் உலகில் வாழும் பதினேழரைக் கோடித் தமிழின மக்களின் தோன்று தொட்ட நிலங்களாக, இப்பொழுதைக்கு இருக்கின்றன. இந்த இரண்டு நிலங்களும் வல்லதிகார ஆட்சியின் கீழ் வேற்றின மக்களிடம் அடிமைப்பட்டுக் கீழ்மையுற்றுக் கிடக்கின்றன. தமிழ்நாடு, 'குடியரசு' என்னும் பெயரால் இந்தியாவை ஆண்டுவரும் பார்ப்பன வணிக வடநாட்டு இந்தி வெறியரிடமும், தமிழீழம், ஆரிய இனச் சிங்கள வெறியரிடமும் கிடுக்கிப் பிடியில் சிக்கிக் கொண்டு கிடப்பதைப் போல் கிடக்கின்றன. இவ்விரண்டு நிலங்களையும் விரைவில் மீட்டாக வேண்டும். இதற்கு இரண்டு நிலப் பகுதிகளிலும் விடுதலைப் போராட்டங்களைத் தொடங்கியாக வேண்டும்.

எதிர்பாராத வகையிலும், நல்ல வாய்ப்பாகவும், சூழலின் அழுத்தங்களாலும், தமிழீழத்தில் விடுதலைப் போராட்டம் வெடித்து விட்டது. ஆனால் தமிழகத்திலோ, இங்குள்ள அரசியல், இனநலத் தலைவர்களின் தந்நலவுணர்வாலும், ஒருவருக்கொருவர் மனமேவாத தன்மையினாலும், ஒருவரையொருவர் வஞ்சித்துக் கீழறுப்புச் செய்யும் இழிவுச் செய்கையாலும் தலைவர்களுக்கிருக்கும் அடங்காத பண நசையினாலும், விடுதலைப் போராட்டத்திற்கான அடிப்படை உணர்வுகளே இன்னும் முளையிடாமல் உள்ளன. எனவே மலர்ந்துவிட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கே

(தொடர்ச்சி 4-ஆம் பக்கம் பார்க்க)

0 தென்மொழி, தமிழ்நிலம் ஆசிரியர் தமிழ்நாட்டுப் பிரிவினை உணர்வைத் தூண்டுகிறார்!

0 அவரின் எழுத்துகள் வன்முறையைத் தூண்டுவனவாக இருக்கின்றன!

0 அவர் எழுத்துகளை ஆராய்ந்த நடுவணரசின் உசாவல் குழு, அவரைக் கடுமையாகக் கண்டிக்கிறது!

0 அக்குழுவின் முடிவை, நடுவணரசின் செய்தித்தாள் கழகமும் ஏற்றுக் கொள்கிறதாக, அரசுக்கு அறிக்கை கொடுத்திருக்கிறது!

0 நடுவணரசின் கண்டன அறிக்கை!

நடுவணரசின் செய்தித்தாள் கழகத்தின்(Press Council of India) சார்பில், தென்மொழி, தமிழ் நிலம் இதழ்களின் ஆசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்கள் மேல் சாட்டப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை ஆய்வதற்காகக் கடந்த அக்டோபர் 28-இல் ஐதராபாத்தில் ஓர் ஆய்வுக் குழு அமைக்கப் பெற்றிருந்தது.

அக்குழு, தன் ஆய்வு அறிக்கையையும் இறுதியான தீர்ப்பு முடிவையும் அரசுக்குக் கொடுத்திருந்தது. அதனடிப்படையில் செய்தித்தாள் கழகம், நவம்பர் 10-ஆம் பக்கல் அத்தீர்ப்பு அறிக்கையை ஆசிரியர் அவர்களுக்கு அனுப்பித் தன் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது. அவ்வறிக்கையின் ஆங்கில வாசகத்தையும், அதன் தமிழ் மொழிபெயர்ப்பையும் கீழே தருகிறோம்.

எத்தகைய சூழ்நிலையிலும், எதற்கும் அஞ்சாமல் அரசு நடவடிக்கைக்குக் கவலைப் படாமல் தமிழின முன்னேற்ற முயற்சிகளை எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது என்பதை அன்பர்கள் தெளிவாக, இவ்வறிக்கையினின்று விளங்கிக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

இந்தச் சூழ்நிலையில், நம் இயல்பான முயற்சிகளுக்காக அரசு எந்த அளவு தண்டனை கொடுத்தாலும் நாம் மனமுவந்து ஏற்றுக் கொள்ள அணியமாகவே இக் கடுமையான, அஞ்சத்தக்க நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறோம். அப்போக்கில் இன்று போல் என்றுமே உறுதியுடன் இருப்போம் என்பதை அன்பர்களுக்கும் அதே பொழுது அரசுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இனி, ஐதராபாத்தில் நடந்த ஆய்வுக் குழுவின் அறிக்கை வருமாறு:

Decision of the Press Council of India in the Complaint of the Ministry of Information and Broadcasting against 'Thenmozhi', Tamil Monthly and 'Tamil Nilam', Tamil Weekly rendered on October 28, 1986 at Hyderabad

In a communication dated January 17, 1986 Ministry of Information and Broadcasting stated that an editorial in the July-August 1985 issue of 'Thenmozhi', a Tamil Monthly and writing dated July 28, 1985 in the issue of 'Tamil Nilam', a Tamil Weekly might give rise to secessionist tendencies among the readers. The first writing criticised Mr. Rajiv Gandhi for his inability to help Sri Lanka Tamils who had been victimised by the Sri Lanka Government and its Security Forces. In the second writing it was stated that final solution to the development of the Tamil race was a free and sovereign Tamil Government. It also called upon the Tamil leaders to establish Tamil Nadu as a separate state.

As the matter was considered to be serious, show cause notices were issued to the editors of both the newspapers.

In a consolidated written statement, it was submitted that those magazines were published with a view to educate the Tamilians and to make them understand the ancient history and evolution of Tamilians as also to protect them from the invasion by foreigners and their 'aids'. According to them, since Tamil Language, literature and culture was being ruined by foreigners, it become their duty to protect them. They stated that they had no mala fide intention to hurt the sentiment of non-Tamilians.

This matter was considered by the Inquiry Committee of the Council at its meeting held on September 18, 1986 at New Delhi.

None appeared either on behalf of the complainant or the respondent.

Upon perusing the material on record, "the committee was satisfied that the impugned writings were in clear violation of all journalistic norms and ethics, if not of the Laws of the land. They are provocative and dangerous as they preached secession. The Committee decided to censure the editors.

The Council decided accordingly.

இதன் தமிழ் மொழிபெயர்ப்பு:

தமிழ் மாத இதழ் 'தென்மொழி', தமிழ்க் கிழமை இதழ் "தமிழ்நிலம்" ஆகியவற்றின் மேல் அரசின் தகவல் மற்றும் செய்தி பரப்புத்துறை அமைச்சகம் கூறிய குற்றச்சாட்டுகளின்படி, நடுவணரசின் செய்தித்தாள் கழகம் '1986', அக்டோபர் 28-இல் ஐதராபாத்தில் எடுத்த தீர்மான முடிவு.

கடந்த 1986, சனவரி 17-இல், அரசின் தகவல் மற்றும் செய்திபரப்புத் துறை அமைச்சகம், தமிழ் மாத இதழான தென்மொழி தன் சூலை - ஆகத்து 1985 வெளியீட்டிலும், தமிழ்க்கிழமை இதழான தமிழ்நிலம் தன் 1985 சூலை 28 வெளியீட்டிலும், அவற்றின் வாசகர்களிடையில் பிரிவினை நோக்கத்தைத் தம் ஆசிரியவுரைகளில் வெளிப்படுத்தியிருந்தன என்று, ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. அவற்றுள், முதல் வெளியீட்டில் இலங்கை அரசாலும், அதன் பாதுகாப்புப் படைகளாலும் கொடுமைப் பட்டுக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு உதவாத திரு இராசீவ் காந்தியின் நடவடிக்கையைத் திறனாய்வு செய்திருக்கிறது. இரண்டாம் வெளியீட்டில், தமிழின முன்னேற்றத்திற்கு முடிவான தீர்வு இறைமை பெற்ற தமிழ்நாட்டு அரசை அமைப்பதே என்று கூறப் பெற்றிருக்கிறது. அத்துடன் தமிழகத் தலைவர்களைத் தனித் தமிழ்நாட்டைத் தனியரசாக உறுதி செய்ய அறைகூவி அழைக்கிறது.

இச்செய்தி கடுமையானது என்று கருதப்பட்டதால், அவ்விதழ்களின் ஆசிரியர் மேல் அது தொடர்பாக ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு அறிக்கை கொடுக்கப்பட்டது.

அதற்கு, ஒரு முழுத்தொகுப்பான எழுத்துரை விடையாகக் கொடுக்கப்பட்டதில், அவ்விதழ்கள் தமிழர்களுக்கு தம் முந்தைய வரலாற்றை அறிவிக்கும் நோக்கத்துடனும், அவர்களின் நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளைப் பிறவினத் தாக்குதல்களிலிருந்து காக்கும் எண்ணத்துடனும் அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் கருத்துடனும் அவை எழுதப் பெற்றனவாகக் கூறப்பட்டது. அத்துடன் அவர்களின் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவை, பிறவினத்தவரால் அழிக்கப் படுவதாகவும், அவற்றைக் காப்பது தங்கள் கடமை என்றும் கூறப்பெற்றது. மற்றபடி, தமிழரல்லாத பிற இனத்தவரின் உணர்வுகளை ஊறுபடுத்துவது தங்கள் நோக்கமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்செய்தி, 1986 செப்டம்பர் 18-இல் புதுத் தில்லியில் மேற்படி கழகத்தின் உசாவல் குழுவில் கருத்தாய்வு செய்யப்பட்டது.

அக்குழுவின் உசாவலுக்கு முறையீட்டாளரோ, குற்றஞ்சாட்டப்பட்டவரோ நேரில் வரவில்லை.

எனவே, பதிவில் இருந்த செய்திகளை மட்டும் நன்கு ஆய்ந்து பார்த்ததில், அவ்வாய்வுக் குழு, குற்றஞ்சாட்டப்பெற்ற அக்கருத்துரைகள், எல்லா வகையான செய்தியிதழ் நெறிமுறைகளையும் வரைமுறைகளையும் அல்லது இந்நாட்டுச் சட்டமுறைகளையும் வலித்தமாக மீறுவனவாக முழு மனத்துடன் முடிவு செய்தது. அவை நாட்டுப் பிரிவினைக் கருத்துகளைப் பரப்பத் தூண்டுவனவாகவும், நாட்டு ஒற்றுமைக்கு ஏதம் விளைவிப்பனவாகவும் உள்ளன என்று ஆய்வுக் குழு தீர்மானித்து, அவ்விதழாசிரியரைக் கண்டித்தது.

செய்தியிதழ்க் கழகமும் அவ்வாறே முடிவு செய்கிறது

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் - நடத்தும்

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு!

இடம் : பெரியார் திடல் நாள் : '86, திசம்பர் 27,28.

அழைப்பிதழ்!

பேரன்புடையீர், வணக்கம்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் சார்பில், வரும் திசம்பர் 27, 28-ஆம் பக்கல்களில் (காரி, ஞாயிறு நாள்களில்) சென்னை பெரியார் திடலில், நடைபெறவிருக்கும் தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு, மிகவும் முகாமையான வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு கருத்தரங்கு ஆகும்.

அவ்விரண்டு நாள் கருத்தரங்கிலும் கலந்து கொள்ளவும், கருத்தறிவிக்கவும் கேட்டுக் கொண்டு தமிழகத்திலுள்ள அறிஞர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், மாணவர் தலைவர்கள் முதலிய அனைவருக்கும் அழைப்புகள் விடுக்கப் பெறும்.

அவர்களன்றிக் கருத்தரங்கில் கலந்து கொள்ள வரும் அன்பர்களும் ஒதுக்கப்பெறும் நேரங்களுக்கேற்ப கருத்தரங்கின் நோக்கத்தையொட்டித் தங்கள் கருத்துகளைக் கூற வாய்ப்பளிக்கப் பெறும்.

எனவே இவ்வறிக்கையைக் கண்ணுறும் அன்பர்கள் அனைவரும் தங்கள் தங்கள் குடும்பத்துடனும் நண்பர்களுடனும் தவறாமல் இரண்டு நாள் கருத்தரங்கிலும் கலந்து கொள்வதுடன், இரண்டாம் நாள் இறுதியில் நடைபெறும் கருத்துத்தேர்தலிலும் தவறாமல் தங்கள் ஒப்போலைகளை இடுமாறும் வேண்டிக் கொள்கிறோம்.

தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் தமிழினத்திற்கு எதிர்கால முன்னேற்றப் பாதையைத்தேர்ந்து கொடுக்க, சென்னை நோக்கி வாருங்கள்; இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க கருத்தரங்கில் 'நாங்களும் பங்கு பெற்றோம்' என்னும் பெருமையைப் பெறுங்கள்!

அன்பன்

முதல்வர், உ. த. மு. க. பெருஞ்சித்திரன்

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்,
உணர்வும், உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! நிரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லைஎன் உடலும் ;
எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3) இதழ் எண் 77 (7-12-1986) (பகுதி31-34

பத்தாண்டுகள் எனினும் உள்ளே இருங்கள்!

அன்பினிய கலைஞர் அவர்களே!

இந்தித் திணிப்புச் சட்ட எரிப்புப் போரில் நீங்கள் சிறை சென்றிருப்பது பெருமைக் குரியது. நெஞ்சு நிறைய வாழ்த்துகின்றோம்.

இந்தச் சிறை வாழ்க்கை, உங்கள் அரசியல் போராட்ட வரலாற்றிலேயே ஒரு குறிப்பிடத் தக்கதாகும்.

இத்தனை நாள் நடந்த இந்தியெதிர்ப்புப் போராட்டத்திற்கும், இப்பொழுது நீங்கள் நடத்திச் சிறை புகுந்த போராட்டத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு.

இப்போராட்டத்தில்தான் அரசியல் சட்டத்திலேயே கை வைத்திருக்கிறீர்கள், நீங்கள்! - இது முதற்பெருமை!

இதற்கு மேலும் ஒருபடி மேலே சென்று, ''தமிழையும் இந்தியாவின் அதிகார முழுமை பெற்ற ஆட்சிமொழியாக ஆக்கினால் போராட்டத்தை விலக்கிக் கொள்வதாக'' அறிவித்துள்ளீர்கள்! - இது தங்களுக்குத் தனிச் சிறப்புத் தரும் இரண்டாவது பெருமை!

ஆனால், தாங்கள் சிறை புகுந்ததைப் பலரும் பலவாறு திறனாய்வு செய்திருக்கிறார்கள்.

அவை பற்றியெல்லாம் நீங்கள் துளியும் கவலைப்பட மாட்டீர்கள் என்பது நமக்குத் தெரியும்! உங்களுக்கு வந்த பனிமலை போன்ற துன்பங்களையெல்லாம் தாங்கித் தாங்கி எஃகுப் போல் ஆகியிருக்கும், உங்கள் தோள்கள்!

உங்கள் நெஞ்சமோ இரும்புக் குகை!

நீங்கள் இனி எதற்காகக் கவலைப்படவேண்டும்? கவலைப்படாமல் மாவீரன் மண்டேலா போல உள்ளே இருங்கள்!

அரசியல் பதவிகளுக்கு அப்பால்பட்டுத் தமிழுக்காகவும், தமிழினத்திற்காகவும் இனி, உங்களை ஈகம் செய்து கொள்ளுங்கள்!

நீங்கள் சிறையிலிருக்கும் ஒவ்வொரு நிமையமும், இனித் தமிழினத்தில் ஒவ்வொரு வீரன் தோன்றி வளருவான்!

எத்தனை நாள்கள் சிறையிருக்கின்றீர்களோ, அத்தனை ஆயிரம் வீரர்கள் உருவாகி வருவார்கள் இங்கே!

இந்தியை எதிர்த்து மட்டும் சிறை செல்ல வில்லை, நீங்கள்!

வடவாரிய வல்லாண்மையை எதிர்த்துச் சிறை சென்றிருக்கின்றீர்கள், நீங்கள்!

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் நம் தாய்மொழியாம் தமிழுக்கு இழைக்கப்பட்ட கொடுமையை எதிர்த்துச் சிறை சென்றிருக்கின்றீர்கள், நீங்கள்!

தமிழின உரிமைக்காக உங்கள் உடல் சிறையில் வாடுகிறது!

தமிழினத்தின் எதிர்கால விடிவுக்கு என நீங்கள் சிறை புகுந்திருக்கின்றீர்கள்!

உங்கள் உடலுக்கு ஓர் ஊறுபாடு நேருமானால்...

தமிழினம் தலை கொள்ளாது! தமிழர்கள் கண்துயில மாட்டார்கள்! தமிழ் நாட்டில போர் தொடங்கிவிட்டதாகப் பொருள்பட்டுவிடும்! தங்களின் இவ் வீரத்தன்மைக்குத் தமிழர்கள் தலை வணங்குகிறார்கள்!

தமிழ்த்தாய் பேருவகை கொள்கிறாள்!

தமிழுக்கு விடிவு காணப் புறப்பட்ட வேங்கையே!
பத்தாண்டுகள் எனினும், பதற்றப்படாமல் சிறைக்குள்ளே இருங்கள்!

தமிழினத்தின் பொழுது விடியப்போகிறது!
புலர்ந்துவிட்டான் எழுகதிரவன், இங்கே!
போர்முரசு கொட்டத் தொடங்கி விட்டது!
புரட்சி! புரட்சி! இனிப் புரட்சி விடியல்தான்!

புதிய புறநானூறு பிறக்கட்டும்! பொங்கி மலரட்டும் தமிழகம்!
அது கலைஞரின் போராட்ட முயற்சிகளுக்கு முதல் வாழ்த்துப் பாடட்டும்!

வாழ்க தமிழ்! வளர்க தமிழினம்!

ஆப்கானிசுத்தானிலிருந்து படைகளின் ஒரு பகுதியைத் திரும்பப் பெற்றதாக சோவியத்து உருசியா ஏமாற்றுகிறது!

(சீன நாளிதழ் தரும் விளக்கச் செய்தி!)

மக்களிடம் நம்பிக்கை பெறவேண்டும் என்றும் இன்றைய அளவில் உரிமை கேட்டுப் போராடும் நாடுகள் தம் துணையை நாடுதல் வேண்டும் எனும் நோக்கிலும் சிறந்ததொரு ஏமாற்றுச் செயலைச் செய்துள்ளது சோவியத்து நாடு.

'மக்கள் நாளிதழ்' (People's Daily) -எனும் சீனப் பொதுவுடைமை இயக்கத்தால் நடத்தப் பெறும் பெரும் எண்ணிக்கையில் விற்பனையாகும் நாளிதழ் இவ்வுண்மையை எடுத்துரைக்கிறது.

கடந்த 2-11-86 -ஆம் பக்கல் வெளியான அந் நாளிதழ் வெளியிட்ட செய்தி;

''இன்றைக்கு ஆப்கானிசுத்தானில் சோவியத்தின் படை எண்ணிக்கை 1,20,000. அதில் தகுதி குறைந்த நிலையில் உள்ள 6,000-படைவீரர்கள் மட்டும் சோவியத்து அரசினால் திரும்பப் பெறப்பட்டனர். மேலும் அந்த 8,000 பேர்களும் தகுதி குறைந்தவர்கள் மட்டுமல்லாமல் வலிமை இழந்த, படைத் துறைக்குப் பயன் படாதவர்களே.

மேலும் அந்த 8,000 பேர்கள் திரும்பப் பெறுவதற்குச் சில மாதங்களுக்கு முன்பாகத்தான் 15,000 முழுநிலையான படை வீரர்கள் புதியவகைக் கருவிகளுடன் ஆப்கானிசுத்தானுக்கு அனுப்பப் பெற்றனர். அவ்வகையில் பார்க்கும் பொழுது ஆப்கானிசுத்தானில் சோவியத்து நாட்டின் படை வலிமை கூடியே இருக்கிறது.

எனவே, சோவியந்து நாடு படைவீரர்களைத் திரும்பப் பெற்றது என்பது முழுமையான ஏமாற்றுதல் என்பதோடு மட்டும் அல்லாமல், அவ்வகையில் ஒரு நல்ல முடிவை ஆப்கானிசுத்தானில் ஏற்படுத்தப் போவதாகக் கூறியது எவ்வளவு அப்பட்டமான பொய் என்பது விளங்கும்,

இவ் வகையில் ஆப்கானிசுந்தான சிக்கல் என்பதற்குத் தீர்வு என்பது முழுமையாக, சோவியத்துப்படைகள் அங்கிருந்து வெளிக்கிளம்புவது என்பதைத் தவிர வேறு இருக்க இயலாது. அங்கே இருந்து கொண்டு ஆளுமைப் படுத்திக் கொண்டு அச் சிக்கலுக்குத் தீர்வு காண முடியாது''

விடுதலைச் சூளுரைத் தெழு!

(பாவலர் தமிழகுமரன் ஈரோடு.)

தமிழா! உனதெதிர் காலத்தைத் தீர்மானிக்கத்
தருசென்னை நோக்கி வருவாய்!
தவிராது திசம்பர் இருபத்தேழெட்டில்
தளர்நடை நீக்கி வருவாய்!
இமிழ்கடல் சூழ்ந்தமா ஞாலத்தை ஆண்டநீ
எடுபிடி யாளனுக
இன்றுதாழ்ந் திழிந்தனை! ஏன் எதனாலடா?
எவனுண்டால் என்ன வென்றே

அமிழ்ந்தே உணர்வுகள் அடிமைத் தொழும்பேறி
அவலத்தில் வாழுகின்றாய்!
அடிமாடாகநீ எத்தனை நாளிங்கே
அச்சத்தில் வாழ்ந்திருப்பாய்?
உமியாய்ப் பதராய் உணர்வழிந் தேநீ
உலகிடைத் தாழ்ந்திழிந்தாய்!
உணர் வெழுந்தேநீ உரிமையைப் பேணி
உன் நாட்டை மீட்பதென்றோ.

வந்தாரை யெல்லாம்நீ வாழவைத்து இன்றைக்கு
வந்தாய் தெருவுக்கு
வாழ்வை இழந்தாய்! வளத்தை இழந்தாய், நீ
வறுமையில் வாடுகின்றாய்!
சொந்தத்தாய் நாட்டில் தொழுதடிமை செய்து
சுருண்டு கிடக்கின்றாய்!
சோற்றுப்பாடே பெரும்பாடாய்த் தெருச்
சுற்றியலைகின்றாய்!

வெந்ததைத் தின்று 'விதி'வந்தால் சாவதென
வீழ்ந்து கிடக்கின்றாய்!
வீறினை இழந்து காறியுமிழ்ந்திட
வீணிலே உண்டுறங்கி,
சிந்தித்துப் பார்த்திச் சிறுமையை நீக்கச்
சிலிர்த்தெழுந்தாயா நீ?
செக்குமாடாய்ச் செம்மறியாடாய்ச்
சிறு புழு வாய்நெளிவாய்!

(வேறு)

தாய்த்திரு நாட்டிலே நாய்ச்சிறு வாழ்க்கை நீ
வாழ்ந்துமே தாழுவதோ புகழ்
வீழ்ந்துமே வாழுவதோ?-இதை
ஆய்ந்துநீ பாரடா! ஆழ்ந்து நீ பாரடா!
ஆளப் பிறந்தவன் நீ- உல
காளப் பிறதந்வன் நீ!
ஒன்றே உனக்குயிர் ஒன்றே உனக்குயிர்
இன்றே புறப்படடா நீ!
குன்றாச் சிறப்புடையோன்.-அட
என்றோ விடுதலை? என்றோ விடுதலை?
இன்றே களம்புகுவாய்.நீ!
வென்றே வலம்வருவாய்.

முகவை மாவட்ட உ. த. மு. க. கூட்டச் செய்தி!

கடந்த துலை 30-இல் பறம்புக்குடியில் திரு. வ. அறிவுடைநம்பி தலைமையில் உ. த. மு. க. கூட்டம் நிகழ்ந்தது.

தலைமையுரையில் ''உ. த. க. தமிழக மெங்கும் பட்டிதொட்டியெங்கும், செயல்பட்டது. பறம்பை அறிவனும், சுதி. அறவாழியும், மு. தமிழ்க்குடிமகனும் ஊர் ஊராய்ச் சென்று இயக்கம் வளர்த்தனர் பாவாணரும, பாவலரேறு பெருஞ்சித்திரனாரும் தலைமை யேற்கப் பறம்புக்குடியில் மாநாடு கண்டோம். அன்றுகண்ட எழுச்சி எதிர்காலத் தேர்தலில் ஆட்சியைப் பிடிக்கும் உ.த.க. என்ற எண்ணத்தை அனைவர்க்கும் உண்டாக்கியது. அந்த மாநாட்டில் பாவாணர்க்குப் பணிவிடை செய்யும் வாய்ப்புப் பெற்றேன். ''ஒமநீர் வேண்டும், உண்டி அணியமா?'' என்று, பாவாணர் கேட்ட நினைவு என் நெஞ்சை விட்டு நீங்கவில்லை,

'எனக்குத் தமிழ்க்குடிமகன், அறிவுடைநம்பி என்று பெயரிட்டார். என் பெயரையும், என் குழந்தைகள் பெயரை தூய தமிழில் அரசிதழில் பதிவு செய்ய ஆர்வம் கொண்டுள்ளேன்'', என்று திரு. வ. அறிவுடைநம்பி பேசும்போது குறிப்பிட்டார்.

அடுத்து, இரங்கல் உரைகள் தொடர்ந்தன. மாவட்டத் தலைவர் வ, மெ. இரெத்தினம், ''ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் இயற்கை எய்தியது பேரிழப்பாகும்''. என்றார்.

பறம்பை அறிவன், ''கு. தென்னவன் மறைவு உ.த.மு.க.விற்குப் பேரிழப்பாகும் சிறிய ஈகமும் நினைவுகூரத் தககது'', என்று கூறி இரங்கல் தெரிவித்தார்.

மறைமணாளன், ''சோமலெயின் மறைவு பயணக் கட்டுரையின் முன்னோடிகளில் ஒருவரின இழப்பு'' எனச் சுட்டிக் காட்டி இரங்கலுரை யாற்றினார்.

''புதிய கல்விக் கொள்கையும் தமிழ்நாடும்'' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குமாறு தலைவர் வேண்டினார் அதன்படி. திரு. சுவாமிநாதன், ''இந்திரா காந்திக்குப் பின் இராசீவ் பெயர் இப்போது அடிபடுகிறது. புதிய கல்விக் கொள்கை, இந்தியை இந்திபேசாத மக்களிடப் திணிக்கும் திட்டமே. பேராயக் கட்சியை அடியோடு ஒழிப்பேன் என்றவரும், பேராயக் கட்சிக்காரரும், இந்தி வெறியர் என்ற முறையில் ஒன்றுபட்டு நம்மீது இந்தியைத் திணிக்கிறார்கள். ஒய். பி. சவானும், மதுலிமயியும், பிரகாச சாத்திரியும் ஒன்றுபட்டு விடுகின்றனர். தமிழர்களிடம் 'அந்த ஒற்றுமை' ஏற்பட வில்லையே'' என்று வரலாற்று விளத்தங்களோடு எழுச்சியுரை ஆற்றி திரு. கணேசன், 'திசை திருப்பும்னார். திட்டமே புதிய கல்விக் கொள்கை'' என்பதை வலியுறுத்தி 'எப்பக்கம் இந்தி வந்தாலும், எதிர்ப்போம் என முழங்கினார்.

திரு. அருள்நேயன், ''ஆங்கிலேயன், வணிகம் செய்ய ஆங்கிலத்தைத் திணித்தான். இந்திக்காரர்கள் அதிகார வெறி கொண்டு இந்தியைப் புகுத்தி ஆள நினைக்கிறார்கள்'' என்றார்.

''தேசிய இனங்களின் விடுதலையிலேயே, இந்திய தேச ஒற்றுமை உள்ளது'' என வலியுறுத்தி உ.த.மு.க. வளர்ச்சி பெற உதவுமாறு வேண்டினார்.

அடுத்த கூட்டம் 7-11-86-இல் நடைபெறும். ''தேசிய இனங்களின் விடுதலை'' பற்றிப் பேசுபவர்கள், பறம்பை அறிவன், முகவை மகிழ்நன், வ. அறிவுடைநம்பி.

உ.த.மு.க. மாநாட்டின் 'தமிழினத்தின் எதிர்காலத் தீர்மானிப்பு'க்கான கருத்தாய்வும் நிகழும் என முடிவு செய்யப்பெற்றது.

முகவையில் ''சார்புநிலை ஆட்சியாளர் அலுவலகம்'' என்று தூய தமிழில் எழுதும்படி மாவட்ட ஆட்சியாளரிடம் வேண்டி ''சப் கலெக்டர் அலுவலகம்'' என்று எழுதியிருப்பதை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

தலைமை முடிவுரை - மகிழ்நன் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவெய்தியது.

செய்தி : இ. அருள்நேயன்

இந்தி யெதிர்ப்பைக் கைவிட வேண்டாம்!

உ. த. மு. க. செய்திகள்:

உ. த. மு. க. வளர்ச்சியில் முகவை மாவட்டம் முதன்மை பெறுகிறது!

முகவை (இராமநாதபுரம்) மாவட்ட அமைப்பாளர் திரு. பறம்பை அறிவனார், - உ. த. மு. க. கழக வளர்ச்சியில் தம் முழுக்கவனத்தைச் செலுத்தியுள்ளது, நமக்குப் பல்லாற்றானும் மகிழ்ச்சி தருகிறது.

எதற்கெடுத்தாலும் தலைமையகத்தையே நம்பியிராமல், அல்லது எதிர்பார்த்திராமல், தக்காங்கு ஆன வகையில் கழகக் கொள்கைகளையும் அவற்றின் வழித் தமைவான செயற்பாடுகளையும் தத்தம் பகுதிக்குள்ளேயே செய்து வருவதே இப்பொழுதைக்கு நிறைவளிக்கக் கூடியது என்று தலைமையகம் கருதுகிறது.

ஆங்காங்கு மாவட்ட அமைப்பாளர்கள், ஆங்காங்குள்ள வட்டப் பொறுப்பாளர்களையும், கழக ஆர்வலர்களையும், தென்மொழி அன்பர்கள் பிறரையும் வைத்துக் கொண்டு, அவ்வப்பொழுது அவர்களை ஒருங்கு கூட்டுவதும், கழகத்தை எவ்வெவ் வகையில் கட்டமைக்கலாம், கழகம் இல்லாத அண்மையயல் சிற்றூர்களில் எவ்வாறு கழகத்தைத் தோற்றுவிக்கலாம், ஆங்காங்குள்ள பொதுமக்கள் சிற்றூர்ப்புறத் தொழிலாளர்கள் உழவர்கள், உழைக்கும் பெருமக்கள் ஆகியோரை எவ்வாறு ஒன்று கூட்டலாம், எவ்வெவ் வகையில் அவர்களுக்குக் கழகக் கொள்கைகளையும், நடைமுறை அரசியல் உண்மைகளையும் எடுத்துக் கூறி, அல்லது படித்துச் சொல்லி விளக்கலாம், இயன்ற பொழுதில் கழக முதல்வர், துணைப்பொதுச் செயலாளர், பிற முகாமைக் கருத்தாளர்கள், சொற்பொழிவாளர்கள் ஆகியோரை அழைத்து, அவ்வெவ் வகையில் கருத்து விளக்கக் கூட்டங்களை நிகழ்த்தலாம் - என்பன பற்றியெல்லாம் கலந்துரையாடுவதும், கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வதும், இயன்ற வகையில் செயல்படுவதுமே, உ.த.மு.க வை வலுப்படுத்தும், பரவலாக்கும், செயல்படுத்தும் வழிமுறைகளாகும்.

இவை பற்றியெல்லாம் துளியும் சிந்திக்காமல், அல்லது செயல் எண்ணாமல், வெறுமனே உ.த.மு.க. செயல்படவில்லை, பேச்சற்றிருக்கிறது, மூச்சற்றிருக்கிறது என்று வீணைக் கூறிக்கொண்டிருப்பதும், குறைப்பட்டுக் கொண்டிருப்பதும் ஆங்காங்கு அமர்த்தப் பெற்ற அமைப்பாளர்களுக்கும் பொறுப்பாளர்களுக்கும் செயல்திறம் போதவில்லை, அறிவாற்றல் விளங்கித் தோன்றவில்லை என்றுதான் பொருள் தருமேயன்றி, உ.த.மு.க. தானே நிறைநிலையில் வலுப்பெற்றுவிட முடியாது என்பதையும், தலைமைக் கழகமோ அல்லது முதல்வரோ துணைப்பொதுச் செயலரோ அனைத்தையும் செய்துவிட முடியாது என்பதையும் முதலில் நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இந்த வகையில், நம் முகவை மாவட்ட அமைப்பாளர் திரு. **பறம்பை அறிவனார்** அடிக்கடி அவர் மாவட்டத்தில் உள்ள வட்டப் பொறுப்பாளர்களை ஒருங்கு கூட்டுவதும், அவர்களுடன் கழக வளர்ச்சி, மற்றும் **தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு** ஆகிய இதழ்களைப் பரப்புகின்ற முயற்சிகள், நடைமுறைக் கொள்கைகள், செயற்பாடுகள் இவற்றை மக்களிடம் எடுத்து விளக்குகின்ற தேவைகள் ஆகியவை பற்றிச் சிந்திப்பதும், செயலுக்குக் கொண்டு வருவதுமான வினைகளில் கடந்த நான்கைந்து மாதங்களாகத் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். அதுவுமன்றி, அவர் அனைத்து நிலைச் செய்திகளைப் பற்றியும் ஏராளமாக நம இதழ்களுக்குத் தொடர்ந்து எழுதி விடுத்து வருகிறார்.

அவரின் இடையறாத உணர்வும், ஊக்கமும், உறுதியும், செயற்பாடுகளும், அறிவுழைப்பும் நமக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் மனநிறைவையும் அளித்து வருகின்றன. உண்மையாகச் சொன்னால், இப்பொழுதைக்கு நம் இயக்கத்தில் அவர் போன்ற துடிப்பும் தோய்வும் வினைத்திறனும் உள்ள இன்னொருவரைக் காண்பது அரிது என்றே கருதவேண்டியுள்ளது. இது வெறும் மனவுணர்வுடன் கூறப்பெறவில்லை. பிறரும் அவரைப் பின்பற்றவேண்டும்; பின்பற்றினால் கழகம் நல்லமுறையில் வளர்வதற்கு வாய்ப்பாக அமையும் என்பதற்காகக் கூறப்பெறுகிறது.

முகவை மாவட்ட உ.த.மு.க. இந்த வகையில் தம் முதற்கலந்துரையாடலைக் கடந்த 15-8-86-இல் கூட்டியது. அக்கூட்டத்தில் அம்மாவட்டத்தில் உள்ள 14 வட்டப் பொறுப்பாளர்கள் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

அக் கூட்டத்தில், தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய கழக இதழையும், கழகச் சார்பு இதழ்களையும் வளர்த்தெடுப்பது பற்றித் தீர்மானித்த துடன், நம் கொள்கைகளை உழைக்கும் மக்கள், உழவர், தொழிலாளர்க்கிடையில் எவ்வாறு எடுத்துச் சொல்வது என்பது பற்றியும், கொள்கைகளை கலைகளில், பேச்சில், செயலில் எவ்வாறு வெளிப்படுத்துவது என்பது பற்றியும் விரிவாகப் பேசி முடிவு செய்யப்பெற்றது.

இக் கூட்டம் பற்றிய அறிக்கை தட்டச்சு செய்யப்பெற்றுத் தலைமையகம் உட்பட அனைத்து வட்டங்களுக்கும் அனுப்பப்பெற்றது.

அதன் அடுத்த கூட்டம் 7-9-86 மீண்டும் கூடியது. கூட்டத்திற்கு திரு. **வ. மெ. அரத்தினம்** தலைமையேற்றார்கள். கூட்டச் செயலர் திரு. அருள் நேயன், வரவேற்புரையும் கூட்ட நோக்கத்தையும் விளக்கிய பின்னர் திருவாளர்கள் சிறுவயல் நாராயணன், சிறுவயல் வடக்கு சாமிநாதன், கிளியூர் காசா முகைதீன், வயலூர் க. பெரிய கருப்பன், பொன்னம்பலம், முகவை கணேசன், முகவை மோகன், முகவை மகிழ்நன், கீழைக்கரை மறைமலையான், மெய் அருண்மொழியன் ஆகியோர் இயக்க முன்னேற்றத்திற்கான பல கருத்துகளையும் முறையே எடுத்து விளக்கிய பின்னர், இறுதியில் மாவட்ட அமைப்பாளர் திரு. **பறம்பை அறிவன்** அவர்கள், "உலகத் தமிழினம் இணைந்து தரும் ஆதரவினால் தமிழ்நாடு உரிமையோடு வாழும் புரட்சி மாற்றம் தாய்மொழி வழியேதான் ஏற்படுதல் முடியும்; தேசிய இன விடுதலை வேண்டும்; கருவி அனைவர்க்கும் பொது; கருவிப் போரை யாரை நோக்கி நடத்துதல் வேண்டும் என்பதுதான் நம் வினா; நாம் பிரிவினையாளர் அல்லர்; விடுதலை உணர்வாளர்" என்றார்.

நிகழ்ச்சி முடிவில், உ.த.மு.க."வின் உயர்ந்த கொள்கைகள் ஏழினையும் உயர்த்திப் பிடிப்போம்; உலகத் தமிழர் அளவினின் ஒற்றுமை, பாதுகாப்புக்கு அனைவரையும் அறைகூவி அழைக்கிறோம்; தினகரன், குங்குமம் போன்ற இதழ்கள் தமிழின மக்களுக்குப் பாடுபடுவது உண்மையெனில் தமிழில் பிழை இன்றியும், தமிழ்ப்பண்பாடு பேணும் வண்ணம் அருவருப்பற்ற கலைஇலக்கியங்களையும் வெளியிட முன்வருதல் வேண்டும்; என்பனபோலும் 16 தீர்மானங்களை நிறைவேற்றிச் செயலுக்கு முனைந்தனர்.

அவர்கள் மீண்டும் 14-9-86-இல் கூடிக், கழக அன்பர்கள் வரும் திசம்பர் 27, 28-இல் சென்னையில் நடைபெறவிருக்கும், தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கிற்கு வரவும், கருத்தரங்கத்திற்குப் பொருள் திரட்டி அனுப்பவும் அதன் வெற்றிக்கு அனைவரும் பாடுபடுதல் வேண்டும் என்றும் தீர்மானித்துக் கொண்டனர்.

அடுத்து 5-10-86-இல் அவர்கள் மீண்டும் கூடி வரும் 16-11-86-இல் 'புதிய கல்விக் கொள்கையும் தமிழ்நாடும்' என்பதுபற்றி ஒரு கலந்துரையாடல் நடத்துவதென்றும், அதற்குக் கழகத் துணைப்பொதுச் செயலாளர் திரு. **தென்னவன் கோ**-வை அழைப்பது என்றும் தீர்மானித்தததுடன் மேலும் ஐந்து தீர்மானங்களையும் தீர்மானித்தனர்.

இவ்வாறாக அனைத்து நிலைகளிலும் கழகத்திற்கே செயற்பாட்டு நிலையில் முன்னோடியாகவும், முடுக்கமாகவும் திகழும் முகவை மாவட்ட உ.த.மு.க. அமைப்பையும் அதன் அமைப்பாளர் திரு. பறம்பை அறிவனார் அவர்களையும் மனமாரப் பாராட்டுவதுடன் அவர் உணர்வையும் ஊக்கத்தையும் பிற அமைப்பாளர்கள் அனைவரும் பின்பற்றவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.

- *கழக அமைப்புக் குழுச் செயலர்*

1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகத் தமிழர்களின் உடனடி ஆதரவு தேவைப்படுகிறது. தமிழகத்திலும் அந்தத் தேவையுணர்வால் தான், இரண்டகர்கள், காட்டிக் கொடுக்கும் கயவர்கள், உடன்பிறந்தே இனத்தைக் கொல்லும் நச்சுப் பூச்சிகள் ஆகியவர்கள் தவிர, பிற அனைத்துத் தமிழர்களும் தமிழீழத்திற்குக் கருத்து, உணர்வுகள் வழிப் பேராதரவு கொடுத்தும், பொருள்கள் வழிப் பேருதவி நல்கியும் வருகின்றனர்!

இந்த நிலையில், இந்திய அரசினரும் இலங்கைச் சிங்கள வெறியினரும் தம் ஓரினத் தன்மையாலும் ஏதிகார ஆட்சி முறைமைகளாலும் திரைமறைவில் பேசி, வெளிப்படையாக நடத்திவரும் பேச்சுரை நாடக நடிப்புகளாலும், தமிழீழப் போராளிகள் நடத்தி வந்த பெருமுயற்சிகளுக்கு இடைத் தொய்வும் இடையூறும் ஏற்பட்டுள்ளன என்பது உண்மையானாலும், அதற்காக, இவ்வளவு பெரிய அளவாகத்தொடங்கிய இனமுயற்சியில்—அதன் பெருநோக்கான கொள்கையிலேயே நாம் ஒரு நெகிழ்ச்சி ஏற்படுத்திக் கொண்டோம் என்றால், அதன் வருத்தத்தையும் இன முன்னேற்ற இழப்பையும் யாராலும் அளவிட்டு உரைத்துவிடமுடியாது.

எதிரி கொடியவன் தான்! வலியவன் தான் இன்னும் சொன்னால் சூழ்ச்சி மிக்கவன்; நேர்மையற்றவன்; - என்னும் வகையில் என்னென்ன சொற்களுண்டோ அத்தனைக்கும் பொருத்தமானவன் தான் இலங்கைச் சிங்களவனும், அவன் தலைவனும்! ஆனால், அதற்காக நாம் நம் கொள்கையில் தளருவதா? -ஐயகோ, இஃதெவ்வளவு பெரிய கொடுமை! இக்கொடுமையின் முடிவு என்னவாக இருக்கும்? எதில் போய் முடியும் என்று சிந்திக்க வேண்டாமா?

எனவே, தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டோம் என்று எந்தப் போராட்டக்குழு அல்லது குழுக்கள் சொன்னதோ, அல்லது சொன்னவையோ, தெரியவில்லை. அவ்வாறு திரு. குல்தீப் நய்யாரிடம் அவை தெரிவித்திருக்குமானால், அவை போராட்டக் குழுவாகத் தம்மை வளர்த்தெடுத்துக் கொண்டதிலேயே பொருளில்லை. ஏதோ ஓர் உணர்வின் அடிப்படையில் அல்லது ஒரு வேகத்தின் அடிப்படையிலேயே அவை அக்கொள்கையை அவ்வாறு கைபெடுத்துக் கொண்டிருக்க வேண்டும்! பிறகு, சூழ்நிலையைக்கேற்பவும், எதிர்ப்பு நிலைகளைக் கருதியும் அதைக் கைநெகிழ்த்திருக்க, திருவள்ளுவர் மொழியில் சொல்வதானால் கைதூவி (1021) இருக்க வேண்டும்; அந்தோ, இரக்கம்! இழிவு!

இனி, குல்தீப் நய்யார் கட்டுரையில் இன்னொரு செய்தியும் காணப் பெறுகிறது. அது போராளிக் குழுவின் இன்னொரு தலைவராக உள்ள திரு. உமா மகேசுவரன் (முகுந்தன்) அவர்கள் கூறியதாக உள்ள கருத்து. அஃது, "இந்தியாவைத்தான் நாங்கள் மிகவும் நம்பியிருக்கிறோம். இந்நாடுதான் எங்களுக்கு உறுதியாக எதையும் செய்யவேண்டும்" என்பது.

இந்தக் கருத்தும் பொருளற்ற அல்லது பயனற்ற கருத்தே. **தமிழ்நிலம்** இது தொடர்பாகத் தொடக்கத்திலிருந்தே எவரும் கூறாத வகையில், மிக உறுதியான கருத்தைக் கூறி வந்திருக்கிறது. இந்தியா என்று முகுந்தன் சுட்டுவது தமிழ நாட்டையும் அதில் உள்ள தமிழினத்தவர்களையும் கருதிக் கொண்டே என்று நினைக்க வேண்டியிருக்கிறது. மற்றபடி அவர், இப்பொழுதுள்ள வடநாட்டுக்கார இந்திவெறியரையும் பார்ப்பன-வணிக நடுவண் ஆட்சியாளரையும் நினைத்தார் என்று கொண்டால், அவர் இப்பொழுதுள்ள இந்தியாவைச் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை என்றே பொருள்படும். ஏனெனில் இப்பொழுதுள்ள நடுவணாட்சி என்பது, பச்சைப் பார்ப்பனர்களும், அவர்களுக்கு அனைத்து நிலைகளிலும் ஒன்றித் துணைபோகும் கொழுத்த முதலாளியக் கொள்ளையர்களும் கொண்ட ஒரு வெறிக் கும்பல் ஆட்சிதான் என்பதை அவர் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆரியப் பார்ப்பனர் எங்கேனும் எப்பொழுதேனும் தமிழினத்தவரின் விடுதலைக்கு அல்லது முன்னேற்றத்துக்குத் துணையாக இருக்கமுடியுமா? வரலாற்றில் எங்கேனும் இந்த வியப்பான நிகழ்ச்சி நடந்துள்ளதாகக் காட்ட முடியுமா? ஆட்டுக் குட்டிகளுக்காக எங்கேனும் ஓநாய் துணைபோனதாகக் கூறமுடியுமா? முகுந்தன் தமிழீழத்தவர். எனவே அவர்க்கும் அவரைப போன்றவர்களுக்கும் இந்தியாவைப் பற்றியும், அதன் முதலமைச்சரான இராசீவின் இனத்தைப் பற்றியும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

பார்ப்பன இனம் நாகப் பாம்பைவிடக் கொடிய நஞ்சு உள்ள இனம். அதில் எங்கேனும் ஓரிரண்டு சவலைப் பாம்புகள் இருக்கலாம். ஆனால் அவற்றைப் போன்றவர்கள் இராசீவ் ஆக வரமுடியாது! எனவே தமிழின உரிமை மீட்புக்கு அல்லது விடுதலைக்குப் பார்ப்பன இனத்தின் இயக்கத்தையோ துணையையோ, தமிழ்த் தேசிய இன விடுதலைக்காகப் பாடுபடும் அல்லது பாடுபடப் போகும் எந்தப் போராளியும் எதிர்பார்க்கவே கூடாது. அஃது இதுவரை தமிழீழப் போராளிகள் பெற்ற ஏமாற்றத்தைப் போலத் தொடர்ந்த ஏமாற்றத்தையும் அவமானத்தையுமே தரும். இந்த உண்மை நம் அன்புக்குரிய உமாவுக்கு (முகுந்தனுக்கு) ஓரளவு முன்பே தெரிந்திருந்தாலும் எவ்வாறு அவர் அப்படிக் கூறினார் என்று தெரியவில்லை. ஒருவேளை அடுத்த படியில் கால் வைத்திருக்கிறாரோ, என்னவோ? எஃது எப்படியானாலும்போராளிகள் ஒன்றை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை (964)

இனி எவ்வாறேனும் காலப் போக்கில் நம் தமிழீழப் போராட்ட மறவர்கள் அரசியல் **அமிர்தலிங்கத்**தைப் போல், அத்துணையளவு தாழ்ந்து போய்விட மாட்டார்கள் என்று நம்புகிறோம்; தாழ்ந்து போய்விடக் கூடாது என்று எச்சரிக்கிறோம். தாழ்ந்து போய்விட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்!

27,28 கருத்தரங்கத்திற்கு வருக!

கூர்க்கு நாடும், அரசியல் பின்னணியும்

தேசிய இனமும்;

இந்தியப் பொதுவுடைமைக் கட்சிகளும் :

'உலக நாடுகளில் உள்ள பாட்டாளிகள் அனைவரையும் ஒரணிப்படுத்தி ஆளும் கொடு நெறிகளையும், முதலாளியத்தையும் வெட்டி வீழ்த்த வேண்டும் எனும் 'டிராட்ஸ்கிய' இலக்கு, நடைமுறைக்கு ஒவ்வாது' என உருசியப் புரட்சியாளர் தோழர் இலெனின் தூக்கியெறிந்த பின்னும், இன்றைக்கு முற்போக்குச் சட்டை மாட்டிக் கொண்டு மார்க்சியம் பேசும் கூட்டங்கள் 'டிராட்சிகிய' சிந்தனை சிறிதும் அறுபடாமல் நடந்து கொண்டிருப்பது வருத்தத்திற்குரியது.

"மக்கள் இனங்களைப் பொறுத்தவரையில், ஒரு பொது மொழியும், ஆட்சிப் பகுதியும், பொருளியல் வாழ்வும், மன இயல்பும் அடிப்படையாகக் கொண்டு வரலாற் றடிப்படையில் உருவாகிய நிலையான மக்கள் குமுகமே தேசிய இனம்" என்று தோழர் இசுடாலின் உறுதியிட்டுக் கூறிய பின்பும், 'தன்னுரிமையோடு இணையும் இணைவே இணைவு, மற்றது கடுமையான முதலாளியச் சிந்தனையில் இணைக்கும் கொடுநெறிப் போக்காகும்'-எனத் தோழர் இலெனின் திரும்பத் திரும்பப் பறைசாற்றும் பொழுதும், இந்தக் கினற்றுத் தவளைகள் ஏனோ இந்தியா என்ற சுரண்டல் களத்தின் சுற்றடைப்பைக் கட்டிக் காத்தே விடுவது என்று பார்ப்பனியக் கூட்டத்தின் தலைமையில் அணி திரள்கின்றன.

அவ்வாறே, வல்லாளுமையர்களினாலும், பார்ப்பனிய, வணிகக் கூட்டத்தினராலும் கட்டமைக்கப் பெற்ற நிலத்தை அப்படியே கட்டிக்காத்துக் கொள்வதே சரி எனக் கொக்கரித்துத் திரிகின்றன இந்தப் பொதுவுடைமைக் குழுக்கள்.

ஆனால் உண்மையான மார்க்சப் பற்றுள்ள பொதுவுடைமைச் சிந்தனையர் சிலர் அடிப்படையை விளங்கிக் கொண்டு, தேசிய இனங்களின் தன்னுரிமையையும், விடுதலையையும் வற்புறுத்துவதோடு, அதுவே இன்றைய முதாமையான சிக்கல் எனப் பறைசாற்றுகின்றனர்.

இந்நிலையில் இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள பல்வேறு தேசிய இனங்களின் உரிமை எழுச்சிகள் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டுள்ளன. அவ்வகை உணர்ச்சி மெல்லச் சுடர்விட்டு எரியத் தொடங்கியுள்ளது.

இந்தியாவில் உள்ள தேசிய இனங்கள் :

இந்தியாவில் ஏறத்தாழ 1,600 மொழி வழக்குகள் பேசப் பெறுகின்றன. அவற்றுள் முதாமையான பெருமொழியாகத் திகழ்வன முப்பத்து ஏழு. அவ்வகை மொழிகளில் பெரும்பாலும் தன்னிறைவு கொண்ட மொழிகளாகவும் பெருமளவு மக்கள் தொகை கொண்ட மொழிகளாகவும் எண்ணி அரசு பகுத்தது பதினைந்து. அவ்வகைப் பதினைந்து மொழிகளையே இந்தியாவின் தேசிய மொழிகளாக அறிவித்தது. அப்பதினைந்து மொழிகளில் ஒன்றாக சமற்கிருதத்தையும் வைத்திருக்கிறது இந்தியக் கொடுநெறி அரசு. சமற்கிருதம் பேசுவோர் 1000 போகள் கூட இல்லை என்கிற நிலையில் இந்தியாவின் தேசிய மொழிகளில் சமற்கிருதமும் ஒன்று (இந்தியாவின் தேசிய இனப் பாகுபாடு பற்றியும், அதில் நடுவண் அரசின் அடிமுழியங்களையும் பிறிதொரு கட்டுரையில் பார்ப்போம்)

கூர்க்கு நாடு :

இந்நிலையில் வட இந்தியப் பகுதிகளில் உள்ள பெரும்பாலான இனங்கள் இன்றைக்கு இந்தியக் கொடுநெறி அரசின் கீழிருந்து விடுபட வேண்டும் என்றும், தங்கள் இன மக்களின் உண்மையான விடுதலை என்பது தங்கள் தேசிய இனத்தின் விடுதலையிலேயே கிடைக்கும் என்றும், அவ்வகையில் ஒவ்வொரு தேசிய இனமும் முழுமையான விடுதலை பெறும் நிலையே உலக மாந்த நிலைகளுக்கான உண்மையான ஒற்றுமையையும், உலகம் அனைத்தையும் கட்டுவதற்கான வழியையும் ஏற்படுத்த இயலும் என்றும் தெளிவு பெற்றன.

—*சீக்கிய நாடு, சம்மு- காசுமீரம், நாகலாந்து, மிசோரம், அசாம், அருணச்சலம், கூர்க்கம்* முதலிய நாடுகள் இந்தியாவின் வடக்கேயும்;

—*தமிழகம், தெலுங்கம், கருநாடகம், கேரளம், கோவா, மராட்டியம்* முதலிய நாடுகள் இந்தியாவின் தெற்கேயும் தன்னுரிமை, அஃதாவது முழுமையான விடுதலை கேட்டுக் கொண்டிருக்கும் நாடுகளாகும்.

இவற்றுள் ஏறத்தாழ ஒவ்வொரு நாடும், அல்லது தேசிய இனமும் இன்றைய அளவில் இந்தியாவில் தனி மாநிலங்களாக உள்ளன. ஆனால் கூர்க்கம் மட்டும் வங்காள மாநிலத்தின் வடபகுதியில் உள்ள இனமாக உள்ளது.

நேப்பாள மொழியாயைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கிற கூர்க்கர்கள், நேப்பாள நாட்டுப் பிரிவினைக்கு முன்னர், 'டார்சிலிங்' -பகுதியில் கூலிகளாகப் பணி செய்து வந்தனர். தேயிலைத் தோட்டப் பணி தவிர பிற நிலைகளில் அவர்களின் ஈடுபாடு உதிரித் தன்மை கொண்டதாக இருந்ததால், தங்களின் இன உரிமையை நேப்பாளம் இந்தியாவினின்று பிரிந்தபோதே, அதோடு இணைந்து அகன்ற அளவிலான நிலப்பகுதியைப் பெற்றிருக்க இயலாமல் போனது. அன்றைக்கு எல்லைச் சிக்கலில் அதிகம் கவனம் செலுத்தாத நேப்பாளியர்கள் தங்களுக்கென நாடு கிடைத்தால் போதுமென எண்ணி, தங்கள் இனத்தவர்கள் வாழும் சில பகுதிகளை வங்காளத்தினருக்கு விட்டுக் கொடுத்து நாடு பெற்றுக் கொண்டனர். இங்ஙனம் சில பகுதிகள் வங்காளத்தினருக்கு விட்டுக் கொடுக்கப் பெற்றுள்ளது என்பது கூட அந்நேப்பாளியர்க்குத் தெரியாமல் இருந்ததே மிகவும் வியப்பு.

அதற்கு இன்னொரு காரணமும் உண்டு. நேப்பாள மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்த போதும், கூர்க்கர்கள் நேப்பாளிகளோடு தாய் இனத்தினர் எனும் எண்ணத்தோடு தொடர்பு கொள்ளாததே யாகும்.

விடுதலைக்குப் போராடும் கூர்க்கர்கள் :

இந்நிலையில் தங்கள் கூர்க்கு இனத்தவரை முழுமையாக ஒடுக்கிக் கொண்டிருப்பவர்களாக, வங்காளிகளையே கருதுகின்றனர். அவர்களுக்கு இந்திய ஆளும் கொடுநெறியினரால் ஏற்படும் தொல்லையைவிட வங்காளிகளாலேயே மிகுந்த தொல்லை ஏற்படுகிறது.

—எனவே வங்காளிகளின் ஆளுமையையே முழுமையான பகையாக அவர்கள் கருதவேண்டியிருந்தது.

—இந்நிலையிலேயே '*அனைத்திந்தியக் கூர்க்கர் கழகம்*' இந்திய விடுதலைக்கு முன்பாகவே தொடங்கப் பெற்றது. மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்படுவதற்கு முன்பாகவே இந்த அனைத்திந்திய கூர்க்கர் கழகத்தைப் பொதுவுடைமைக்கட்சி (பொதுவுடைமை கட்சி இரண்டாகப் பிரிவதற்கு முன்பாக) தனி கூர்க்கு நாடு பெற வேண்டி வலியுறுத்தி வந்தது. குறிப்பாக 9-5-1947 ஆம் நாள் அக்கழகத்திற்குப் பொதுவுடைமைக் கட்சி மடல் எழுதியிருந்தது. அதில்,

"*வளமும், செழிப்பும் நிறைந்த இக்கூர்க்கப் பகுதியை முழுமையான விடுதலை நாடாக இந்த இந்திய விடுதலைப் பெருநிலத்திலிருந்து உருவாக்குங்கள். கட்சிகளின் மற்ற திட்டங்கள், செயல்பாடுகளை ஒதுக்கியெறிந்துவிட்டு, தனி உயர் தேசிய இனமாகக் கட்டமைத்து, இந்தியாவில் உள்ள பிற அனைத்துத் தேசிய இனங்களோடும் நட்புறவில் தொடர்பு கொள்ளுங்கள்*" —என்று எழுதியிருந்தது

ஆனால் அன்றைய 'கூர்க்கர் கழகம்' அதைச் சரியான பார்வையில் ஏற்றுச் செயல்படுத்த முயலவில்லை.

அதன் பிறகு, பொதுவுடைமைக்கட்சி இரண்டு பிரிவுகளாகப் பிரிந்ததோடு மட்டுமல்லாமல், பாராளுமன்ற ஈடுபாட்டில் உள்ள கட்சிகளுக்கு முதலில் பின்பாட்டுப் பாடி, பின்தாமே பாராளுமன்றத்திற்குள் தலைநுழைத்துப் பார்த்தது வரை தம் தனிச் சிறப்புகளை ஒவ்வொன்றாக இழந்து முழுதையாக இருந்தநிலை போய்க் கட்டெறும்பாக மாறி மேற்கு வங்காளத்தில் இறுதியாக அரசுக் கட்டிலில் அமர்ந்தது.

அதன் நிலையான ஒப்பந்தக்காரராக திரு.**சோதிபாசு** அமர்ந்தார். பொதுவுடைமைக் கட்சியிலிருந்து பிரிந்த இந்தியப் பொதுவுடைமைக்கட்சி(மார்க்சியம்) [CPI (M)]பின் சார்பில் அவர் முதல்வராக அமர்ந்திருக்கிறார்.

இந்நிலையில் கூர்க்கர் கழகத்தின் வழி. கூர்க்க மக்களுக்கு நிறைவான வாழ்க்கை அமைப்பு கிடைக்காததன்வழி, 1980 ஆம் ஆண்டு திரு *சயாசு கிசிங்* என்பவரால் '**கூர்க்கர் தேசிய விடுதலை முன்னணி**'(GNLF) தோற்றி வைக்கப் பெற்றது. முழுமையான இறைப் பற்றாளரும், இறைவன் அனைத்து மதங்களிலும் இருப்பதாக எண்ணி அனைத்து மத வழிபாட்டிலும் உடன்பாடு கொண்டவருமான திரு. கிசிங் முதலில் இந்தியப் படைத்துறையில் இருந்தவர்.

முழு இறை நம்பிக்கையாளராக, இவர் இருந்த போதிலும், கணியத்தின் மீது தனக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை என்று கூறும் திரு கிசிங், மக்கள் முழுமையான நம்பிக்கையில் திரு இராமகிருட்டிண பரமஅம்சர், விவேகானந்தர், நேதாசி, காந்தி ஆகியோரின் அறிவுரைப்படி நாங்கள் செயல்படுவதே முழு வெற்றியைத் தரும் என்கிறார்.

விடுதலைபெற்ற அண்டை நாடுகள் துணையில் கருவி வலிவைப் பெருக்கிக் கொண்டிருக்கும் திரு கிசிங் சிறிதும் போர் முறையில் நம்பிக்கையுடையவர் அல்லர். அமைதியிலேயே போராட வேண்டும் எனும் எண்ணம் உடையவர் ஆவார். ஆனால் 'எங்கள் இயக்கத்தவர் அமைதி கொள்ள இயலாமல் போராடும் பொழுது நான் கட்டுப்படுத்த இயலாது' என்கிறார்.

வரலாற்றுப்படி என்றைக்கும் கூர்க்குநாடு வங்காளத்தோடு இணைந்திருந்தது இல்லை என்று கூறும் திரு. கிசிங் நாங்கள் கேட்கும் உரிமை நேப்பாளத்தோடு சேர்ந்து கொள்வதற்காக அன்று என்கிறார்.

தங்களுக்கு இன்றைக்குப் பாராளுமன்ற உறுப்பினர் ஒரு சிலரது துணை இருப்பதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

இவ்வகையில் பல நிலைகளில் மிக உணர்வு பொங்கக் குறிப்பிடும் திரு. கிசிங், தங்கள் கொள்கை என அடிக்கடி குறிப்பிடும் பொழுது,

"***நாங்கள் இந்தியாவிலிருந்து பிரிந்து போகிற நிலையில் தனிநாடு கேட்கவில்லை. ஆனால் இந்தியாவிலேயே உரிமையுள்ள குடிமக்களாக இருக்கவே நாங்கள் விரும்புகிறோம். அந்நிலையில் வங்காள ஆளுமையிலிருந்து பிரிந்து தனி மாநிலம்தான் கேட்கிறோம்.***" —என்கிறார்.

அரசியல் பின்னணிகள் :

இவ்வகையில் திரு. கிசிங் குறிப்பிடுவதன் காரணத்தால், இக்கருத்திற்கு திரு சோதிபாசு முழுமையாக எதிர்ப்புத் தெரிவித்தாலும், இந்தியத் தலைமை அமைச்சர் திரு இராசிவ் காந்தியால் எதிர்ப்புத் தெரிவிக்க இயலவில்லை.

இந்நிலையில், திரு. சோதிபாசு, 'மேற்கு வங்கத்திலிருந்து என்றைக்கும் டார்சிலிங் பிரிந்து போவதை என்னால் ஏற்க முடியாது. நான் முதல்வராக இருக்கிற வரை நான் இசையவே இயலாது'-என்று வலுவாக மறுத்து விட்டார்.

அவர் மறுப்பு மட்டும் அன்று; ஒட்டுமொத்தமாக அவர் சார்ந்த கட்சியும் இந்நிலையை முழுமையாக மறுக்கிறது. அதற்குக் காரணமாக அவர்கள் குறிப்பிடுகையில்,

"இந் நிலைக்கு நாங்கள் மட்டும் (இடது பொதுவுடைமைக் கட்சியினர்)தாம் இசையவில்லை. காரணம் இந்த விடுதலை முன்னணியின் அடிப்படை நோக்கமே உழைக்கும் மக்களைப் பாகுபடுத்துவதாக அமைந்துள்ளது. நாங்கள் தொழிலாளர் ஒற்றுமைக்காக முழுமையாக உழைப்பவர்கள். இந்நிலையில் அவர்களின் பகுப்புகளை எங்களால் சிறிதும் ஏற்கவே இயலாது. மேலும் கூர்க்கர் தேசிய விடுதலை முன்னணி என்பது ஆளும் பேராயக் கட்சியால எங்களை (இடது பொதுவுடைமைக்கட்சியினரை) மலைப்பகுதியினின்று தள்ளி கீழ்ச்சாய்ப்பதற்கென்றே அரசினால் உருவாக்கப் பெற்றது"—என்று குறிப்பிடுகின்றனர்.

—மேலும் மேற்கு வங்க அரசு குறிப்பிடுகையில்,

"அண்மையில இதுபோலும் கூர்க்கர்களின் போராட்டத்தால் ஏறத்தாழ 1500 தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பணியின்றித் தவிக்கின்றனர். 72 தேயிலைத் தோட்டங்களில் 4-தேயிலைத் தோட்டங்கள் இவர்களின் தொல்லைகளால் இயங்குவதில்லை. மேலும் டார்சிலிங்கில் சுற்றுலாத் துறையினரின் 200 விடுதிகள் உள்ளன அவை தொடர்ந்து தொல்லை கொடுக்கப் பெறுவதால் அவற்றின் 2,000 தொழிலாளர்கள் துன்பப்படுகின்றனர்." —என்று பலபடியாக அடுக்கிக் கொண்டே போகின்றது, இந்தப் பொது(!)வுடைமைக் கட்சி!

—இங்கு நாம் கருத வேண்டியது!

-"உழைக்கும் மக்களைப் பகுக்கின்றனர் கூர்க்கர்கள்" என்று கூர்க்க விடுதலைக்கு மறுப்புத் தெரிவிக்கும் வங்காளப் பாட்டாளிகளின்(!)நலன்(!!) அரசு- அண்மையில் அசாம் மாநில எல்லையின் அமைந்துள்ள மேகாலய சுரங்களிலிருந்து பணிபுரியும் கூர்க்கர்கள், வங்காளப் பாட்டாளிகளால் விரட்டி அடிக்கப்பெற்ற பொழுது, இந்த முற்போக்கு அரசு(!)-பாட்டாளிகளின் அரசு(!)விரட்டி அடிக்கப்பெற்ற பாட்டாளிகளில் வங்காளிகளுக்கு மட்டும் மேற்கு வங்கத்தில் புகலிடம் கொடுத்துவிட்டு, கூர்க்கர்களை நேப்பாளத்திற்கு விரட்டி அடித்திருக்கிறது.

மேலும் அவர்கள் கூர்க்கர்களுக்குத் தாங்கள் பலவகைகளில் முழுமையாக உதவி செய்வதாக அறிவித்துள்ளனர். நேப்பாள மொழிக்கு, வங்காள மொழிக்கான நிலையில் முழு உரிமையும் தரப்பெறும் என்றும், டார்சிலிங் மாவட்டம் முழுமையாகத் தன்னிறைவு மாவட்டமாக அறிவிக்கப் பெறும் என்றும் குறிப்பிடுகின்றனர்.

-இங்கு நாம் பார்க்க வேண்டியது!

- இனிமேல் நேப்பாள மொழிக்கு முழு உரிமையும் தரப்பெறும் என்றும், டார்சிலிங் மாவட்டம் தன்னிறைவு மாவட்டமாக அறிவிக்கப் பெறும் என்றும் கூறுவதனால்- இதுவரை ஏற்படுத்தாமல்

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

இந்தியாவில் தேசிய இனங்களின்

(5-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)
அடிமைப்படுத்தி வைத்திருந்தது இந்தப் பாட்டாளிகளின் (!) அரசு?

அத்துடன், இது தேசிய இனங்களுக்கான முரண்பாடு என்றும், அங்ஙனம் அம் முரண்பாடுகள் வழிச் சிக்கல் ஏற்படுவது ஒரு வகையில் நல்லது என்றும் நினைத்தது, நடுவண் அரசு!

-இவை யாவும் ஒருபுறமிருக்க நடுவண் அரசின் நோக்கமாக திரு. இராசீவ் காந்தி தம் கருத்தை வெளியிடும் பொழுது,

"திரு கிசிங் கூர்க்கர் தேசிய விடுதலை முன்னணி தனி மாநிலமாக, மேற்குவங்கத்திலிருந்து வேண்டுமெனக் கேட்கவில்லை, மாறாக நேப்பாளத்திலிருந்து இந்தியாவிற்கு வருபவரை இந்தியக் குடிகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றார்".

-என்று திறமையாக (பொய்யாக)க் கடந்த செப். 18 - ஆம் பக்கல் கல்கத்தா சென்றபொழுது செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார்.

- உண்மையில் அதற்கு முன்பாக சூன் -2- இல் -தான் அவர் திரு. கிசிங்கைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். அந்தப் பேச்சில் திரு. கிசிங் தெளிவாகவும், அழுத்தந்திருத்தமாகவும் தங்களுக்குத் தனிமாநிலத் தேவை பற்றி விளக்கியுள்ளார். அக்கால் சார்பாட்சி மண்டலமாக (Territory) கூர்க்க நாட்டை அறிவிக்கலாமா -எனக் கேட்டிருந்த திரு. இராசீவ் காந்திக்கு, முழுமையாக மறுப்பளித்து திரு. கிசிங், அரை நாகரிக, நாடோடிகளுக்கும், பண்பாடற்ற மக்களுக்குந்தாம் அது போலும் சார்பாட்சி முறை சரியானது; தங்களுக்கு முழு உரிமை கொண்ட மாநிலப் பகுப்பே தேவை என்பதை வலியுறுத்தியுருக்கிறார்.

இங்ஙனம் அரசியல் சூழ்ச்சியால் இருபக்கமும் தலையாட்டிக் கொண்டும், பொய் கூறிக் கொண்டும் தம்மை நிலைப்படுத்திக் கொள்கிறார் தலைமை அமைச்சர்.

- மேலும் அவர் கல்கத்தாவில் குறிப்பிட்டபடி பல பகுதிகளிலிருந்து வரும் நேப்பாளியருக்கு இந்தியக் குடியுரிமை வேண்டுவதாய் திரு. கிசிங் குறிப்பிட்டதாகக் கூறியது அதைவிடப் பொய்யான கருத்தாகும்.

- கூர்க்கர்கள் தங்கள் முறையீடாக வைப்பதிலேயே "நேப்பாளிகள் இந்தியாவிலோ, இந்தியர்கள் நேப்பாளத்திலோ குடியேறுவதற்கான முழு உரிமை அளிக்கும் இந்திய நேப்பாளிய அரசு உடன்படிக்கை (ஏழாம் பகுதி) நீக்கம் செய்யப் பெற வேண்டும்; ஏனெனில் இதனடிப்படையில்-தான் கூர்க்கர்களுக்கு இந்தியக் குடியுரிமை மறுக்கப்படுகிறது" எனக் கூறுகின்றனர்.

அரசியல் சூழ்ச்சிகள்:

ஆக, இந்நிலைகளை ஒட்டு மொத்தமாக வைத்துப்பார்க்கும் பொழுது மூன்று நிலைகள்,

முதலாவதாக, அஃதாவது, அடிப்படையாக டார்சிலிங் பகுதி இயற்கைச் செழிப்புள்ள மாவட்டம், இன்றைய அளவில் மேற்கு வங்கத்திற்கு இரும்புத் தொழிலக நிலையம் டாட்டா-பெரு முதலாளியத்தைத் தம் நாட்டோடு உள்ளடக்கி வைத்திருப்பது அரசுச் சார்பில் பெருத்த ஊதியத்தைப் பெற இயலாமல் போகிறது. மேலும் மேற்கு வங்க நிலையில் பெரு விளை பொருள் அளவிலான உழவுத்தொழிலும், தொழிலகத் தொழிலுமாக உள்ள சணலும், தேயிலையுமாகும். இவ்விரண்டில் ஒன்றான தேயிலையின் வருவாய் மேற்கு வங்கத்தைப் பொறுத்த வரையில் முழுமையாக டார்சிலிங் மாவட்டத்தையே சார்ந்திருக்கிறது.

எனவே டார்சிலிங் மாவட்ட இழப்பு என்பது மேற்கு வங்கத்தைப் பொறுத்தவரையில் பேரிழப்பாகும். எனவே தன்வலக் காரணங்களைப் பொது நல நோக்கினதாக மாற்றிக் காட்டிப் பொதுமை பேசுகிறது வங்க அரசு. இந்நிலையில் முழுமையான முதலாளியாக வயிறு பெருத்த நிலையில் (பொது) உடைமையாளர்களாக சுரண்டிக் கொண்டேயிருக்க எண்ணுகிறது இந்த மாநில அரசு!

இரண்டாவதாக, - இவ்வகை இயற்கை வளம் பாலில் விழுந்த கதையாக நேரடியாக நடுவண் அரசின் பார்வையிலோ, அல்லது தமக்குச் சார்புடைய நிலையில் டார்சிலிங் பகுதி அமைந்து விடுதல் வேண்டும் எனத் திட்டமுடிவுடன் காலத்தைக் கடத்துவதோடு, கடுமையாகவோ நடந்து கொள்கிறது இராசீவ் அரசு!

-மூன்றாவதாக, இவ்விரு அரசியல் கழுகுப் பார்வையிலிருந்து கூர்க்க நாட்டை மீட்க வேண்டும் என எண்ணிவிட்ட திரு. கிசிங், எதிர்காலத் திட்டமைப்பில் தெளிவில்லாமல் இருப்பது வருத்தத்திற்குரியது.

(தொடர்ச்சி 3-ஆம் பத்தி பார்க்க)

அனைத்திந்தியக் கட்சிகள் எல்லாம் தேசிய இனங்களுக்கு எதிரானவையே!

காலம் வந்துவிட்டது. அனைத்து இந்தியக் கட்சிகளுக்கு முடிவுகட்ட! இந்தத் துணைக் கண்டத்தில் உள்ள பல தேசிய இனங்களின் மக்களின் உரிமைக்கு அனைத்திந்தியக் கட்சிகள் எதிராகவுள்ளன. தேசிய இனத்தைச் சாராத மக்கள் எவரும் இலர். இப்படி இருக்கும்போது இந்த அனைத்திந்தியக் கட்சிகள் ஏன், போலியான 'இந்திய தேசம்' 'பாரத நாடு' பற்றிக் கொட்டமடிக்கின்றன? அந்தக் கட்சிகள் தங்கள் தேசிய இனத்திற்கு இரண்டகம் புரிகின்றன. தேசிய இனங்களை ஒடுக்கிக் கொண்டிருக்கும் பேராயக் கட்சியில் இவர்கள் எப்படித்தான் நீடிக்க முடிகின்றதோ? தன்னுரிமைப் போரினைத் தடுக்கின்ற வர்கள் 'இடது' நலக்கட்சிகளாகவும். ஒப்புரவு-சோசலிசம்-பற்றிப் பேசுகிறவர்களாகவும் இருப்பது வியப்பானதுதான்! இந்தியாவின்பேரில் பொருளியல் - முன்னேற்றம் - வளர்ச்சியை ஆதரிப்பவர்கள் 'இந்திய வல்லரசை' ஏற்பவர்களே; அதன் கெடுபிடிக் கொள்கைக்குக் கொடி பிடிப்பவர்களே! மாநிலக் கட்சிகள், ஆட்சியாளர்கள்-அரசுகள், அதிகாரம், தனித்தன்மையைக் காத்துக் கொள்ள, 'மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்' 'மாநிலங்களுக்குத் தன்னாட்சி', என்ற முழக்கங்களை எழுப்பிக் கொண்டிருப்பதை அறிவோம். மாநிலங்களில் 'புதிய கட்சிகள்' உருவாக்கப்படுகின்றன. தன்மானம், தேசியம், வேண்டுமென்று கோருகின்றன. மக்களின் சிக்கல்களை எழுப்புகின்றன. அவை முதலாளியத் தேவைகளாக் இருக்கலாம்!

ஆந்திரம், அசாம், பஞ்சாபில் எழுந்துள்ள தேசிய முழக்கங்கள், பாரதத்தின் வல்லாட்சியை எதிர்த்தெழுந்துள்ளன. இவை வரலாற்றில் தவிர்க்க முடியாதவை; முடிவில்லாத ஒடுக்குமுறைக்கு முடிவுகட்டும் மக்களின் விருப்பங்கள் எனலாம்! அனைத்திந்தியக் கட்சிகள் தேர்தலில் தோல்வியடைகின்றன என்கிறபோதும் முற்போக்குகள் இதனை விளங்கிக் கொண்டு விலக்கியதாக இல்லை; இந்தியத்தை உதறிவிடுவதாக இல்லை. காரணம் அவை, பேராயக் கட்சி போன்றே, தேசிய இனங்களை ஒட்டச் சுரண்டுவதிலும், நடுவப்படுத்தப்பட்ட ஆட்சி அதிகாரப் போட்டியின் பங்காளிகளாகவும் இருக்கும் இயல்புதான்!

இந்தத் துணைக் கண்டத்தில் அரசியல் மெய்ம்மத்தில் முன்னேறிய இயல்பு என்பது, தன்னுரிமை பெற்ற தேசியத்திலே தான் உண்டு. முதன்மையாக எதைஎதையோ பரப்புதல் செய்தாலும், தன்னுரிமையுள்ள தேசியமே ஒப்புரவையும், சரிநிகர், சமான வாழ்வையும், மக்கள் நாயகத்தையும் வழங்கவல்லது. தன்னுரிமைப் போரே-வளர்ச்சியே அனைத்திற்கும் முந்திய தேவை என்பதை உணர்தல் வேண்டும்.

பேராயக் கட்சியும்-தில்லி ஆட்சியாளர்களும் உயர்த்திப் பிடிக்கும் ஒருமைப்பாடு பாரதத்தில் உருவாவது என்பது 'மாய்மாலமே' ஆகும். பாரதத் துணைக்கண்டத்தைக் கட்டியாளவும், அரசியலதிகாரத்தின்மூலம் சுரண்டலைத் தொடரவுமே பேராயக் கட்சியினர் பித்துக் கொண்டலைகின்றனர். இந்தப் பித்தம் தெளிய - இந்தப் பேய்பிடியாதிருக்க ஒரே மருந்து - ஒரே தீர்வு - தன்னுரிமையுடைய தேசிய இன விடுதலையே ஆகும்!

இப்பேருண்மையினை உணர்ந்திருந்தும் சில உருப்படாத மாநிலக் கட்சிகளும், தலைமைகளும், ஒருமைப்பாட்டைக் கட்டியழுகின்றன; பேராயக் கட்சியைத் தொடர்ந்து அலைகின்றன!

அரசியல் கொள்கை வலிமை ஆயிரம் இருந்தாலும் 'இந்தியத் தலைமைக் கட்சிகள்' தன்னுரிமை பற்றிய தவறுகளில் சிக்கித் தடுமாறிக் கொண்டிருக்கின்றன.

இந்தியச் சார்புச் சிந்தனைகள் எண்ணங்கள் ஈடுபாடுகள் எல்லாம் இயற்கைக்குப் புறம்பானவை. தேசியத் தன்னுரிமைப் போராட்ட வெற்றிக்குக் கற்பனையான 'இந்திய ஒருமைப்பாடு' உதவாது என்பதைக் காலமும், வரலாறும் உறுதி செய்து வருகின்றன!

இந்திய வல்லரசாட்சி
பொடிபடப் போவதை
இதன் அதிகார ஆணவக்
கெடுபிடிகள் கட்டியம்
கூறிக் கொண்டுள்ளன.

-பறம்பை அறிவன்.

(FREE NATIONS- June-Oct 1986 - ஆங்கில இதழ் ஆசிரியவுரையைச் சான்று வைத்தெழுதியது).

இதழ் விற்கும் முகவர்கள், அன்பர்கள் கவனத்திற்கு!

தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு- ஆகிய இதழ்களை விற்பனை செய்யும் முகவர்களாலும் அன்பர்களாலும் நாம் படும் தொல்லைகளுக்கும், அடையும் இழப்புகளுக்கும் அளவில்லை. அவர்கள் பட்டியல் தொகைகளைக் குறித்த காலத்தில் அனுப்புவதில்லை. சிலர் நிறைய நிலுவை வைத்திருக்கிறார்கள். சிலர் ஏமாற்றும் நோக்கத்துடன் தொகை விடுக்காமலும். எழுதும் நினைவூட்டு மடல்களைப் பொருட்படுத்தாமலும் உள்ளார்கள். இந்த ஆண்டு இறுதிக்குள் அவர்கள் தம்தம் நிலுவைகளை எச்சமின்றி விடுத்துக் கணக்கைச் சரிசெய்து கொள்ள வில்லையானால், அடுத்த ஆண்டுத் தொடக்கம் முதல் கட்டாயம் இதழ்கள் விடுப்பது நிறுத்தப் பெறுவதுடன் சட்டப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்பெறும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். - அமைச்சர்.

உன்னிடம் வருவான் எதிரி!

தமிழா,

நீ தலைநிமிர்ந்தால் திமிர் என்கின்றனர். குனிந்தால் கோழை என்கின்றனர். இந்த நகைப்புக்குரிய எதிரிகளைக் கண்டு வருகின்றேன். நாம் அடிமைகள் அல்ல ஏனெனில், நம்மீது பார்வை செலுத்தி- நடந்தால் நடந்து- இருந்தால் விலகித் தொடர்கின்ற 'அவர்கள்' நமது நிழல்கள் அல்ல. நமது எதிரியின் 'எடுபிடிகள்' சொந்தமாகச் சிந்திக்க முடியாத, உத்தரவுகளைக் கேட்டு நடக்கும் அவர்களுக்காகவும் நம்மையன்றி யார்தாம் இரக்கப்படுவார்? உன் விழியின் ஒளிவீச்சில் அந்த இருள் கவிழ்ந்த நிழல்கள் தீப்பற்றி எரியலாம். அதனால் தமிழன் சுடப்பட்டாலும் அவன் சுடர்வான்!

உன்னை 'இந்திய' இருளில் அடைத்து விட்டு, உன் இசையைக் கேட்கிறார்கள். அதில் வெடிக்கும் விடுதலைப் பண்ணில் கலந்துள கவை வண்ணங்கள் மிக இனியவை.

வெளியில் நீ, உள்ளும் நீ. எனவே 'எதிரி' கலங்குகிறான். முடிவில் அவனுக்குள்ளேயே நீ எனக் கண்டதும் தன்னையே சுட்டுக் கொள்ளல் கூடும்'

ஆயின், நீ 'எதிரிக்கு இரங்குவது' அப்படித்தான். எனவே, நீ ஏமாளி என்று நம்பி உன்னையே விலைபேசக் கருதி நல்லெண்ணக் குழுவாக வருகின்ற அவர்களிடம் எச்சரிக்கையாயிரு.

பறம்பை அறிவன்.

அண்ணாவும் தம்பியும்

"அண்ணா!"

"என்ன தம்பி!"

"எட்வர்டு கிப்பன் என்பவர் உரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் என ஐந்தைச் சொல்கிறார். அவற்றில் ஒன்று என்ன தெரியுமா, அண்ணா!"

"சொல் தம்பி!"

"எளிய மக்களுக்கு இலவய உணவு வழங்கவும், வேடிக்கை காட்சிகளைக் காட்டவும், அந்த அரசு பொதுப் பணத்தைச் செலவிட்டதும் ஒரு காரணம்'- என்கிறார்"

"அப்படியா?"

"இன்றுள்ள அரசுகளுக்கு அது பொருந்தாமற் போகுமா?, அண்ணா!"

"எனக்குத் தெரியாது தம்பி!"

(1-ஆம் பத்தித் தொடர்ச்சி)

தனி மாநில உரிமையை வெளிப்படையாக திரு. கிசிங் கேட்பது. முதலமைச்சராகத் தாம் மாற வேண்டும் எனும் எண்ணப்படி (தம் முன் படிப்பினைகளான லோங்கோவால், பர்னாலா, மகந்தா, இலால்டெங்கா போன்று) செய்ய எண்ணுவரானால் அவ் விடுதலையை நம்மால் வரவேற்க இயலாது, மேலும் அதை ஏற்கவும் இயலாது.

-ஆனால் திரு. கிசிங் தந்திர(tactical) முறையில் இரு எதிரியில் முதலில் ஒரு எதிரியை நட்பாக்கி மற்றவரை எதிர்த்து, பின், முதல் எதிரியையும் எதிர்க்கலாம் என எண்ணுவாரானால் அ'து ஒரு வகையில் வரவேற்கக் கூடியதே.

முதலில் இன்றைய நிலையில் ஒரு தனி நில அமைப்பைப் பெறுவோம்; பின் அந்நிலத்தை முழுவிடுதலைக்குட்படுத்தப் போராடுவோம் எனில், நமக்கு (மக்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு விடிவுக்குமெனப் போராட முன் வருவது அரிது எனும் நிலையில், நம்பிக்கை இல்லாமல் போனாலும் நம்முடைய வரவேற்பும், வாழ்த்தும் உண்டு.

-எனவே அரசியல் ஊதியம் கருதாமல், மக்கள் நலம் கருதிய போராட்டங்கள் அனைத்தையும் இருகை கூப்பி நாம் வரவேற்கிறோம்! வெல்லட்டும் கூர்க்க மக்கள் விடுதலைப்போராட்டம்! விடியட்டும் முழு உரிமை பெற்ற கூர்க்க தேசம்!

-விடுதலை வேட்பன்.

உ. த. மு. க.-வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
- சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம் !
- இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல் !
- மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி !
- பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம் !
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை !

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- (C) 657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண் 847829.

உறுப்பின
ஆண்டுக் கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள் :
தென்மொழி ந. முத்துக்குமரன். பல்லடம்-மா. ஆறுமுகம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,